# கல்விப்பீடம்
# பட்டப்பின்படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி
# (முழுநேரம்) -2017/2018

## முதலாம் பருவப் பரீட்சை

## CU 502 கல்வியின் உளவியல் அடிப்படைகள்

**நேரம்: 2 மணி 30 நிமிடங்கள்**

---

### பகுதி II

**எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

(1) i. உளவியல் என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்தி கல்வி உளவியல் கற்கை பரப்பில் அடங்கும் கூறுகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. உளவியல் ஆய்வு முறைகளைக் குறிப்பிட்டு கல்வி உளவியலுக்கு பொருத்தமான தரவு சேகரிக்கும் நுட்ப முறைகள் இரண்டினைப் பற்றி விபரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. கல்வி உளவியல் பற்றிய அறிவானது ஒரு ஆசிரியருக்கு வாண்மை விருத்திக்கு பயன்படுமாற்றை வகுப்பறை கற்றல் கற்பித்தல் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

(08 புள்ளிகள்)

(2) i. பிள்ளை விருத்தியின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. பிள்ளை விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு காரணிகளையும் குறிப்பிட்டு அவற்றுள் நான்கு காரணிகள் பற்றி விபரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. நடுப்பிள்ளைப் பருவத்திலுள்ள பிள்ளைகளிடம் சமூக மனவெழுச்சி விருத்தி தொடர்பான அறிவு ஒரு ஆசிரியருக்கு வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுமாற்றை விளக்குக.

(08 புள்ளிகள்)

(3) i. கட்டிளமைப் பருவம் என்பதை [illegible]

(05 புள்ளிகள்)

ii. கட்டிளமைப் பருவத்தினரிடம் காணப்படும் சமூக மனவெழுச்சி விருத்திப் பண்புகளை பட்டியற்படுத்துக.

(06 புள்ளிகள்)

iii. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயன்முறையின்போது கட்டிளமைப் பருவத்தினருடன் இடைவினைத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஆசிரியர் கவனிக்க வேண்டிய விடயங்களை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(09 புள்ளிகள்)

(4) i. ஜீன் பியாஜேயின் அறிகை விருத்திக் கொள்கைக்கிணங்க பிள்ளைகள் அனுபவத்திரளமைப்பினை உருவாக்கிக் கொள்ளும் செயன்முறையினை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

ii. ஜீன் பியாஜேயின் அறிகை விருத்திக் கொள்கையின்படி தூல சிந்தனைப் பருவத்தினரின் அறிகைசார் விருத்திப் பண்புகளைப் பற்றி எடுத்துரைக்குக.

(06 புள்ளிகள்)

iii. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தூல சிந்தனைப் பருவத்தினரின் அறிகைசார் ஆற்றல்களைக் கருத்திற்கொண்டு ஒரு ஆசிரியர் அவர்களுக்கு எவ்வாறான கற்றல் அனுபவங்களை வழங்குதல் வேண்டும் என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

(5) i. ஆளுமை என்ற பதத்திற்கான வரைவிலக்கணத்தை இரண்டு உளவியலாளர்கள் முன்வைத்தவாறு குறிப்பிடுக.

(05 புள்ளகள்)

ii. உளப்பகுப்பு கொள்கையின்படி தனியாளின் ஆளுமை விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை கருத்திற்கொண்டு கற்பித்தல் இடம்பெறவேண்டுமாயின் ஆளுமை தொடர்பான கொள்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகளை ஒரு ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய விதத்தினை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

6) i. கற்றல் என்பதற்கு பொருத்தமான வரைவிலக்கணம் தருக.

(04 புள்ளிகள்)

ii. உளவியல் கற்றல் கொள்கைகளுள் பிரதான அணுகுமுறைகளான நடத்தைவாத மற்றும் அறிகைவாத கற்றல்களுக்கு இடையிலான ஒத்த தன்மைகள் மற்றும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

(08 புள்ளிகள்)

iii. ஸ்கின்னரின் தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கொள்கையின்படி மாணவர்களின் கற்றலை விருத்தியடையச் செய்வதற்கு மீளவலியுறுத்தல்களை பிரயோகிக்குமாற்றை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(7) i. மாஸ்லோவின் தேவைகளின் படிமுறையமைப்பு ஊக்கல் கொள்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு தேவைகளையும் ஒழுங்கு வரிசையில் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. மேற்படி கொள்கையின் கோட்பாட்டு அடிப்படைகளை வகுப்பறையில் ஊக்கலின்றி காணப்படும் மாணவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பதற்கு எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. ஹவாட் காட்னரின் பல்நிலை நுண்மதி கொள்கையின்படி மாணவர்களின் பல்வேறுபட்ட நுண்மதிகளையும் விருத்தி செய்வதற்கேற்ப வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையினை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

(8) i. விசேட தேவையுடைய பிள்ளைகள் யார் என்பதை சுருக்கமாக முன்வைக்குக.

(04 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளின் வகைப்பாட்டினுள் அடங்கும் எழுத்துப் பிரச்சினையுடைய (dyslexia) பிள்ளையின் இயல்புகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. பல்வேறுபட்ட விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கியதான வகுப்பறைச் சூழலொன்றில் கற்றல் கற்பித்தலை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதற்கான ஆலோசனைகளையும் உத்திகளையும்பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

**************